**செ. கு. எண்: 213** **நாள்: 26.11.2018**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 26.11.2018

---

தினமணி நாளிதழின் முன்னாள் ஆசிரியர் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் இன்று (26.11.2018) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

திரு.ஐராவதம் மகாதேவன் அவர்கள் இந்திய ஆட்சிப் பணியிலும், பின்னர் தினமணி நாளிதழின் ஆசிரியராகவும் பணியாற்றிவர். மிக நேர்மையானவர். பழந்தமிழ் இலக்கியத்தில் தோய்ந்த இவர், உலகப் புகழ் பெற்ற தொல்லியல் அறிஞர்; தமிழ் பிராமி கல்வெட்டுகளில் ஆராய்ச்சி செய்தவர். சிந்துசமவெளி எழுத்துகளுக்கும், திராவிட மொழி குடும்பத்துக்கும் உள்ள உறவைச் சொன்னவர்.

திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களுக்கு, 2009-ம் ஆண்டு இந்திய அரசால் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. இவர் ஸ்ரீவித்யாசாகர் கல்வி அறக்கட்டளை மூலம் பல உதவிகளை செய்து வந்தார்.

தொல்லியல் உலகில் தனக்கென தனி இடத்தைப் பெற்ற திரு. ஐராவதம் மகாதேவன், கடின உழைப்பாளியும், அனைவரிடமும் எளிமையாகவும், அன்பாகவும் பழகக்கூடிய பண்பாளர். திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களின் மறைவு பத்திரிகைத் துறைக்கும், தொல்லியல் துறைக்கும் பேரிழப்பாகும்.

திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்ினருக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், தொல்லியல் மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**